**<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்.</u>**

**முன்னிலை. திரு.அ. கர்ணன்.,பி.எஸ்ஸி.,பி.எல்.,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரியலூர்.**

**2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22–ஆம் நாள் வெள்ளிக்கிழமை திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சோபகிருது வருடம் மார்கழித் திங்கள் 6–ஆம் நாள்**

**<u>இடைநிலை மனு எண்.8/2023</u>**
**<u>இன்</u>**
**<u>அசல் வழக்கு எண்.25/2021</u>**

1. சங்கர்,
   த/பெ.வி.குருசாமி,
   கதவு எண்.14/104–ஏ–1,
   பெரியார் நகர்,
   கிணத்துக்கடவு,
   கோயமுத்தூர்–642109. ............... மனுதாரர்

2. பி.பாலா,
   க/பெ.சங்கர்,
   வடக்குத்தெரு,
   மருதூர் கிராமம்,
   ஆண்டிமடம் வட்டம்,
   அரியலூர் மாவட்டம்.

/எதிர்/

1. ஆர்.முருகன், ............... எதிர்மனுதாரர்கள்
   த/பெ.ராமச்சந்திரன்,
   கதவு எண்.4/165, நடுத்தெரு,
   ஆயுதக்களம் தெற்கு,
   உட்கோட்டை (தெற்கு),
   அரியலூர்.–612 901.

A KARNAN Digitally signed by A KARNAN
Date: 2024.01.24 16:03:44 +0530

2. ஆர்.ராமச்சந்திரன் (இறந்தார்)
3. சாந்தி,
   க/பெ.ஆர்.ராமச்சந்திரன்,
   கதவு எண்.4/159,
   நடுத்தெரு,
   ஆயுதக்களம் தெற்கு,
   உட்கோட்டை (தெற்கு),
   அரியலூர்.–612 901.

4. கிளை மேலாளர்,
   பைவ் ஸ்டார் பிசினஸ் பைனான்ஸ் லிமிடேட்,
   வளையப்பேட்டை அக்ரஹாரம்,
   சிண்டிகேட் பேங்க் அருகில்,
   நாகேஷ்வரன் கோவில் ,
   கிழக்குத் தெரு,
   கும்பகோணம்.

5. சத்யா,
   க/பெ.பாலாஜி,
   த/பெ.லேட்.ஆர்.ராமச்சந்திரன்,
   கதவு எண்.4/159,
   நடுத்தெரு,
   ஆயுதக்களம் தெற்கு,
   உட்கோட்டை (தெற்கு),
   அரியலூர்.–612 901.

6. மாலா,
   க/பெ.முருகன்,
   த/பெ.லேட்.ஆர்.ராமச்சந்திரன்,
   கதவு எண்.4/159,
   நடுத்தெரு,
   ஆயுதக்களம் தெற்கு,
   உட்கோட்டை (தெற்கு),
   அரியலூர்.–612 901.

இம்மனுவானது இந்நீதிமன்றம் முன்பாக 15.12.2023 ஆம் தேதியன்று வரப்பெற்ற பொழுது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சின்னராஜ், அவர்கள் முன்னிலையாகியும், 1,3,5,6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ஜெ.தமிழ்முருகன், அவர்கள் முன்னிலையாகியும், 4 ஆம் எதிர்மனுதாரர்

A KARNAN Digitally signed by A KARNAN
Date: 2024.01.24 16:03:55 +0530

தரப்பில் வழக்கறிஞர் எவரும் முன்னிலையாகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, அசல் வழக்கில் பதில் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2). மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சாராம்சம் பின்வருமாறு :–</u>

மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா தொகையும், அதற்குரிய வட்டியும் திரும்ப கிடைக்கக்கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை நேர்செய்து கொள்வதற்கு நீண்ட காலமாக முன்வரவில்லை. அதன் காரணமாக, அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. எதிர்மனுதாரர்கள் உண்மைக்கு மாறாக மனுதாரர்களுடைய பண்பு நலன்களை குறித்து தவறான சங்கதிகளை எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு தாக்கல் செய்திருக்கிறார்கள். அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளைப் பொறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்யப்படவேண்டியது அவசியமானதாகும்.

<u>3). 1 எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையினை 3,5 மற்றும் 6, எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அவற்றின் சாராம்சம் பின்வருமாறு :-</u>

மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல. 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் உண்மையான காரணங்களைக் குறிப்பிட்டு கடந்த

A KARNAN Digitally signed by A KARNAN
Date: 2024.01.24 16:04:11 +0530

21.10.2021 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்கட்டு கோரிக்கை கோரப்பட்டிருக்கும் பட்சத்தில், பதில்வழக்குரை தாக்கல் செய்ய இயலும். அதற்குமாறாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இம்மனுவானது காலவரையறைக்கு உட்பட்டும், சரியான சட்டப்பிரிவுகளின் கீழும் மனு தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கினை காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், இம்மனு தள்ளுபடி செய்யப்படத்தக்கதாகும்.

**4). மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படி அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.**

இம்மனுதாரர்கள், 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கில் மனுதாரரிடமிருந்து 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் ரூ.21,56,600/—த்தினை கடனாக பெற்றுக்கொண்டு செலுத்தப்படாத காரணத்தினால், தாவா தொகையான ரூ.24,80,090/—மும், அதற்குண்டான வட்டியும் திரும்ப கிடைக்கக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வழக்கானது, நிலுவையில் இருந்து வந்த நிலையில், 2 ஆம் எதிர்மனுதாரர் கடந்த 12.02.2022 அன்று இறந்து விட்ட காரணத்தினால், அவருடைய வாரிசுதாரர்களாக 5,6 எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில், எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகின்ற நிலையில், இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் உண்மைக்கு மாறாக மனுதாரர்களுடைய பண்பு நலன்களைக் குறித்து குறிப்பிடப்பட்டிருக்கின்ற காரணத்தினால், அவற்றினை மறுதலிக்கின்ற வகையில் பதில் வழக்குரை

தாக்கல் செய்யப்படவேண்டியது அவசியமாகிறது என்று மனுவில் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்நிலையில், பதில்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை உற்று நோக்கும் பொழுது, மனுதார்களுடைய பண்பு நலன்களை குறித்து தவறாக குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், அதனைப் பொறுத்து உரிமையியல் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தொடரப்பட இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தாவா தொகையை திரும்ப செலுத்தக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில், பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில், எதிர்கட்டு கோரிக்கை கோரப்பட்டு இருக்குமேயானால், பதில்வழக்குரை தாக்கல் செய்ய இயலும். ஆனால், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்கட்டு கோரிக்கை கோரப்படாத நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது சட்டப்படி சரியல்ல என்று கூறப்பட்டிருக்கிறது. அசல் வழக்கில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்கட்டு கோரிக்கை கோரப்படவில்லை. ஆனால், மனுதாரர்கள் தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல், மனுதாரர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள திருமண உறவு மற்றும் தாம்பத்திய உறவு குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றானது உண்மையல்ல என்று மனுதாரர்கள் தரப்பில் மறுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு பதில் வழக்குரையில் மறுக்கப்பட்டிருக்கிறதேயொழிய வேறு விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு குறிப்பிடப்படாத நிலையில், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள பதில்வழக்குரையை ஏற்றுக்கொள்ள அனுமதிப்பதால், எதிர்மனுதாரர்களுக்கு எந்தவிதமான இழப்போ அல்லது பாதிப்போ ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆகவே, நீதியின் நலன் கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது அனுமதிக்கப்படத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

A KARNAN

Digitally signed by A KARNAN
Date: 2024.01.24 16:04:27 +0530

முடிவாக,

(1) மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

(2) செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை - I க்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A KARNAN Digitally signed by A KARNAN Date: 2024.01.24 16:04:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.

**<u>இணைப்பு:-</u>**

சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

A KARNAN Digitally signed by A KARNAN Date: 2024.01.24 16:04:40 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.